தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"—திருக்குறள்

தொகுதி III. { ஸித்தார்த்தஹு கார்த்திகைமீ } பகுதி 4

தமிழகராதி

The Tamil Lexicon.

தமிழ் லெக்ஸிகன் கம்மிட்டி தலைவரான ரெவரெண்ட்
ஜே. எஸ். சாண்ட்லேர் துரையவர்கள் M. A., எழுதியது.

இப்பொழுது புதிதாய்ச் செய்யப்பட்டுவருகிற தமிழ் அகராதியைக் குறித்துப் பலபேர் முதல் முதலில் ஆலோசனை செய்தபோது தமிழ்ப்பதங்களை அங்கிலேய பாஷையில் விளக்குகிற அகராதி தான் வேண்டுமென்ற கருத்தைக் கொண்டு எத்தனம் பண்ணினார்கள். அது தமிழிங்க்லிஷ் அகராதியாகும். ஆனால் அது போதாது, தமிழ்ப்பதங்களுக்கு அர்த்தம் தமிழிலும் காட்ட வேண்டுமென்று அனேகர் அபிப்பிராயப்பட்டதினால் அர்த்தங்கள் இருபாஷைகளிலும் எழு

தும்படி நேரிட்டது. மேலும் இலக்கியப் பதங்கள் வெவ் வேறு நூல்களில் வெவ்வேறு அர்த்தங்களுள்ளன வாயிருப் பதால் ஒரு பதத்திற்குப் பல அர்த்தங்கள் இருக்கும் பட்சத் தில் அந்தந்த அர்த்தத்திற்கு பிரயோகமும் பிரயோகம் வழ ங்கும் இடமும் காட்ட வேண்டியது அவசியம். இப்படியே வேலை பெருகிறது. அகராதி தமிழ்ப்பாஷையை அங்கிலே யருக்கும் சுதேசிகளுக்கும் விளக்கும் பணிவிடைக்குள் ளானது.

யுத்தக்காலத்தில் ஆட்களைச் சோதிக்கிறது போல் அக ராதி செய்யும் விஷயத்தில் பதங்களைச் சோதிக்கும் வேலை பிரதானம்.

ஜனங்களானவர்கள் பிரஜைகள், துணைவர், நடு நிலை யோர், பகைவர் என்று நாலுவகைப் படுவது போலத் தமி ழ்ப்பாஷை வழங்கும் தமிழ் நாட்டில் பதங்களும் நாலுவகை ப்படும்.

பூர்வத்தமிழ்ப் பதங்கள்:—இவைகள் ஆதி முதற் கொ ண்டு அவைகளின் பாஷையாகிய தமிழாகவே இருக்கின்றன. தமிழின் மதுரமான ஓசையும் உறுதியான இலக்கணமும் இன் பமான பாடங்களும் சுலபமான நீதி மொழிகளும் பக்திக் குரிய தேவாரங்களும் இவைகளிலேயே குடி கொண்டிருக்கி ன்றன. இவையே தமிழின் உயிர்.

துணைப் பதங்கள் :—என்னென்ன பதங்கள் வேறு பாஷைகளிலிருந்து வந்து நல்ல நல்ல கருத்துக்களைக் கொ ண்டுவந்து, பூர்வத் தமிழ்ப் பதங்களோடு ஐக்கியப்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ அவையே துணைப் பதங்கள். அவை தமிழ்ப் பதங்களின் உரிமையடைந்து தமிழ்ப் பாஷையின் உறுப்பாயின. இவ்விதமாய்த் தமிழ்ப் பாஷைக்குத் துணை

யாக வந்த விசேஷ மொழிகள் வடமொழிகள் தான். இத்துணை யில்லாமல் தமிழ் மிக்க மெலிவாகும். வடமொழிகளு க்கடுத்ததாய் உருடு பதங்களும் தெலுங்கு முதலிய திராவிட பாஷைகளின் பதங்களும் தற்காலத்தில் அங்கிலேய பதங்களும் எதேஷ்டமாய் வந்தடைகின்றன. இவை யெல்லாம் தமிழின் வளர்ச்சி.

நடுநிலையான பதங்கள்:—எந்த நாட்டிலும் பிரஜைகள் துணைவர், இவ்விரண்டு வகுப்பாரல்லாத அன்னியரிருப்பார்கள். அவர்கள் துணைசெய்கிறதுமில்லை. கெடுதிசெய்கிறதுமில்லை. அவர்கள் இருபிரிவாராவார்கள். செயல்களில் அவர்கள் நடுநிலை நின்றாலும் ஒரு பகுதிமனதில் சிநேகமாயிருக்கவே, மறு பகுதி எதிரிகளின்பேரில் சிநேகங் காட்டுவார்கள். ஐரோப்பாவில் நடந்த மகாயுத்தத்தில் சுவிட்ஸர்லாந்து சனங்கள் அப்படியே நடுநிலை நின்று பாதிபேர் சிநேகமும் பாதி பேர் விரோதமுமான மனதை யுடையவர்களானார்கள்.

அன்னியபதங்களுமுண்டு. தமிழ்ப்பாஷையில் பிறவியாயிராமலும் துணையாகவந்து சேராமலும் நடுநிலையான பதங்கள் அநேகம் வெவ்வேறு பாஷைகளிலிருந்து வந்து தமிழ் நாட்டிலே பேசப்படுவதுண்டு. தமிழ்பாஷையில் அவைகளைச் சேர்க்கவோ இல்லையோ என்பது சோதனையால் கண்டறிந்து கொள்ளவேண்டும். அவைகளுள் எவ்வெவை தமிழ் இலக்கணத்திற்கு மாறுபாடில்லாமல் இனிமேல் புதுக்கருத்துக்கொண்டு வரக்கூடிய இசைவான பதங்களோ அவை யெல்லாம் ஏற்றுக் கொள்ளவேவேண்டியவை. இசைந்து வராத பதங்களுக்கு இடமில்லை. இவை தமிழின் எல்லை.

பகையான பதங்கள்:—சம்பூர்தமில்லாமல் தாறுமாறு உண்டாக்கக் கூடிய பதங்கள் அனேக மிராவாயினும் சில

உண்டு. கொச்சைச் சொற்கள் நல்ல சொற்களின் மாறுபாடம். முதலில் அவைகளை விலக்கப்படாது. சில சொற்களோ மிகவும் அழுகிச் சிதைந்த கொச்சையின் கொச்சையாகும் போது அவை தமிழ்ப்பாஷைக்குப் பகையுள்ளவை. தன் வீட்டிலேயே தனக்குப் பகைவர் எழும்புவதுபோல் இவ்விதச் சொற்கள் தமிழின் மத்தியிலிருந்து எழும்புகின்றன. புறத்திலிருந்தும் பகையான சொற்கள் வேளாவேளையில் வரும். அவைகளுக்குத் தங்குமிடமில்லை. தமிழர் வாயின் உச்சரிப்பே அவைகளை தடுக்கும். திருஷ்டாந்தமாக அங்கிலேய பதமாகிய Conflagration என்பது தமிழ் உச்சரிப்புக்கும் எழுத்திற்கும் பகையான தல்லவா? இவை தமிழுக்கு எச்சரிக்கை.

இந்நான்கு வகைப் பதங்களைச் சோதிக்கிறவேலை தமிழகராதி கம்மிற்றியால் சென்ற ஆறுவருஷ காலமாய் நடந்து வந்ததில் 81,000 (எண்பத்தோராயிரம்) பதங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அர்த்தங்களோடு பதிவாயின.

இப்போது, எழுதின அர்த்தங்கள், பிரயோகங்கள், நூல்களில் பதங்கள் வழங்கும் இடங்கள், முதலிய விவரங்களை ஆராய்ச்சி செய்யும் வேலை நடந்து வருகிறது. 81,000 பதங்களைத் திருத்துவது சொற்ப வேலையல்லாது பெரிய வேலையே. இன்னும் இரண்டொரு வருஷம் செல்லும்.

நடந்த வேலைக்கு ஆதாரம் தமிழ் இலக்கிய நூல்கள் தான். அகராதியிலுள்ள பதங்களைக் காட்டும் பிரயோகங்கள் பின்வரும் நூல்களிலிருந்து எடுக்கப்பட்டன:—தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு (அச்சில் வராதவை தவிர), சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, யசோதர குமார காவியம் புறப்பொருள் வெண்பாமாலை, கல்லாடம், திவாகரம், பிறங்க

லந்தை, சூடாமணி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, திருமந்திரம் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் (வியாக்யானங் கள்), பதினோராந் திருமுறை, திருவிசைப்பா, வீர சோழி யம், இரணியனுரைகப் பொருள், நம்பியகப் பொருள், தண்டிய லங்காரம், நன்னூல், இலக்கண விளக்கம், ஞானமிர்தம், திருக்கோவையா ருரை, தஞ்சைவாணன் கோவையுரை, பெரிய புராணம், பல கலம்பகங்கள், பல பிள்ளைத் தமிழ்கள், பல சதகங்கள், பல அந்தாதிகள், பல கோவைகள், முதலிய அனேக விசேஷமானவை. பதங்களுக்குரிய பிரதேசங்கள் பலவும் விஸ்தாரமுமானவை.

தாவர வஸ்துக்கள் நாமப் பிரதேசத்தில் எத்தனையோ புல்லுகளும், கீரைகளும், கோரைகளும் உண்டு. பூண்டுவகை எத்தனையோ படருங்கொடிகள் பூச்செடிகள் மருந்துச்செடிகள் கணக்கில்லாமல் பேர் பெற்று வருபவை. மரங்களில் சிறுமரம் பெருமரம், படருமரம், உயருமரம், கனிமரம், வாசனைமரம், எங்குமுண்டு. இந்தப் பிரதேசமானது, புற்றரை தாமரைப் பொய்கை பூந்தோட்டம், நந்தவனம், இன்பமான சோலை, அடர்ந்தகாடு, நிறைந்ததானது.

உலோக வஸ்துக்கள் நாமப் பிரதேசம் விசாலமும் ஆழ முமானது. அஷ்டலோகங்கள், 32 பிறவிப்பாஷாணங்கள், நவரத்தினங்கள், சுரங்கங்களின் கரிகள், இவை முதலிய கற் கள் யாவும் ஈனுபக்கங்களிலும் கிடக்கின்றன.

சீவ செந்துக்கள் நாமப் பிரதேசம் பிரத்தியட்சம். மீன் மச்சங்கள் கடலிலும், ஆறுகளிலும், குளங்களிலும், புழு, நண்டு, பூச்சி, பாம்பு, தவளை, முதலை, முதலிய ஊரும் பிராணி கள் மண்ணிலும் நீரிலும், நாலுகால் செந்துக்கள் வர்க்கம் வர்

க்கமாய் நாட்டிலும் காட்டிலும், குருவிப்பறவைகள் அகண்ட ஆகாயத்திலும் நடமாடிக் கொள்ளுகின்றன.

ஆன்மாக்கள் நாமப் பிரதேசம் சதாக்காலங்களுக் குரியது. மனிதனிடை சர்வச் செயல்கள், யோசனைகள், இச்சைகள் நியாயங்கள் தியானங்கள் பாவப்புண்ணியங்கள் இந்நாமப் பிரதேசத்திற் குரியவை. தேவலோக உயிர்களும் கடவுளும் அவருடைய இலட்சணங்கள் குணங்கள், அவதாரங்கள் யாவும் இந்நாமப் பிரதேசத்தின் அருமை பெருமைகள்.

இந்தப் பல நாமப் பிரதேசங்களில் நேர்வழியைக் கண்டு பிடிப்பது எளிதல்ல. என்றாலும் உண்மையான மனதோடும் இவைகளுள் பிரவேசித்து நடப்பதினால் புத்திதெளியும், பயன் பெருகும்.

அகத்தில்காணும் அற்பப் பிராணிகள்.

Little Animals in Our Homes.

சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் உயிர்நூல் ஆசிரியரான ஸ்ரீமான் R. கோபாலையர் அவர்கள் M.A., L.T., எழுதியது.

வீட்டு ஈ

(தொடர்ச்சி)

House Fly.

(Continued)

ஈக்களுள் "ஆண்" 'பெண்" என்ற வித்தியாசமுண்டு. ஆனல் பார்த்தவுடன் "இது ஆண்" "இது பெண்" என்று சொல்லுவது சற்றுக்கடினம். ஆயினும் பெண் ஈக்கள் ஆண் ஈக்களைக்காட்டிலும் சற்று பெரியவை. ஆண் ஈக்களுக்கு வெளி ஜனன இந்திரியமும், பெண் ஈக்களுக்கு முட்டையிடும் கோலும் உண்டு. ஆனல் இவ்விந்திரியங்கள் சாதாரணமாய் வெளியில் தென்படா.

முட்டையிடும் காலம். ஈக்கள் குளிரான தேசங்களில் சாதாரணமாக வெயில் காலத்திலேயும் உஷ்ண பிரதேசங்களில் வருஷமுழுவதும் முட்டையிடும். புணர்ச்சியான 4, 5 நாள்களில் பெண் ஈயானது ஒரு சரியான இடத்தைத் தேடி முட்டையிட ஆரம்பிக்கும். ஈக்களுக்கு குதிரை லாயத்திலிருக்கும் குதிரைச் சாணத்தில் முட்டையிடுவதில் வெகுப் பிரியம். இவ்விடங்கள் அகப்படாவிட்டால் மாட்டுக்கொட்டில், கக்கூஸ்கள், வீட்டுக் குப்பைமேடுகள், அழுகும் கறி

காய்கள், அழுகும் பிணங்கள், அம்பட்டன் கொட்டகையி லிருக்கும் மயிர்க்குவியல்கள், முதலிய இடங்களிலும்; இன் னும் மற்ற அசுத்தமான பதார்த்தங்கள் மக்குமிடங்களி லும் தடங்கலன்னியில் முட்டையிடும். முட்டையிடும் ஈ தன் னுல் தேர்ந்தெடுக்கப்பட்ட பதார்த்தங்களின்மேல் சற்று அங் குமிங்கும் ஊர்ந்து சென்று ,தன்னுடைய முட்டையிடுங் கோ லால் தடவைக்கு 100-150 வரைக்கும் முட்டையிடும். இம் மாதிரியாக ஒரு ஈ தன் வாழ்நாள் முடிகிறதற்கு முன் 4-5 தடவை முட்டையிடு மென்று தெரியவருகிறது.

முட்டை. இது வெண்ணை நிறமுள்ளது. 1/25 அங்குலம் நீளமானது. உருண்டையாயிராமல் குழவிபோல் நீண்டு உரு ண்டிருக்கும். தலைப்பக்கம் சற்று குறுகியும் பின்பக்கம் சிறிது அகன்று மிருக்கும். முட்டையின் ஒருபுறத்தில் தடித்த இர ண்டுகோடுகள் உண்டு. முட்டையிடப்பட்டு 12-மணிமுதல் 20-மணிநேரமான உடனே முட்டைகளின் முதுகுப்புறத்தில் ஒரு நீளமான பிளவு ஏற்பட, உள்ளிருக்கும் ஈக்குஞ்சு புழு வடிவத்துடன் வெளிவரும். கரப்பானைப்போல் ஒரு " முட் டை " யிலிருந்து பல குஞ்சுகள் வெளியாவதில்லை. வெளிப் பட்டதும் குஞ்சு கரப்பானில் இருப்பதுபோல் தாய்வடிவத் துடன் வெளி வராமல் புழுவடிவத்துடன் வெளிவரும். புழு வின் தேகம் 13 வளையங்களாலாகியது. வண்ணுத்திப் புழு, வண்டுப் புழு முதலியவைகளுக் கிருப்பது போல் இதற்குக் கால்களில்லை. கண்கள் முதலியன கிடையா. முன்பக்கம் சற்று குறுகியும், பின்புறம் சிறிது பருத்துமிருக்கும். பின்பக்கத்தில் இரண்டு சிறு துவாரங்கள் உண்டு. இவைகளால்தான் புழு சுவாசிக்கின்றது. முட்டை வெடித்து புழு வெளிவந்த வுடன் புழு சூரிய வெளிச்சத்தை சகிக்காமல், சாணிக்


1
3
5

படத்தின் விவரம்.

1. முற்றிலும் வளர்ந்த ஈ
2. ஈயின் முட்டைகள் — வெடித்து வெளிவரும் பிளவுக் கோடு காட்டப்பட்டுள்ளது.
3. கரு உள்ளடங்கிய ஒரு முட்டை.
4. முட்டை வெடித்து வெளிவந்து முதல் தடவை தோலுரித்தபின் உள்ள தோற்றம்.
5. இரண்டாம் தடவை தோலுரித்தபின் உள்ள தோற்றம்.
6. உறங்கும் அவஸ்தை.

குவியலின் உள்ளே செல்லும். அங்கிருக்கும் அசுத்தப் பதார்த்தங்களை வயிறுரப் புசித்து வளரும். சாணியுள்ளே துளைத்துச்செல்லவும், அழுகும் பதார்த்தங்களை கிழித்துண்ணவும் புழுவின் முன் பக்கத்தில் ஒரு வளைந்த முள் உண்டு. முட்டைகளினின்று புழுக்கள் வெளிவந்து 24-மணி நேரத்தில் புழுக்கள் தமது தேகத்தோலை முதல் தரம் உரித்துச் சற்று பெரியதாகும். இந்நிலைமையில் புழுக்களுக்கு முன்பக்கத்திலும் இரண்டு சுவாசத் துவாரங்கள் ஏற்படுகின்றன. முதல் தடவை தோலுரித்து 24-மணி கழிந்த வுடன் இரண்டாம் தடவை தோல் அகற்றி இன்னும் சற்றுப் பெரிதான புழுக்களாக மாறும். இந்நிலைமை வந்தவுடனே புழுக்கள் விசேஷமாக உணவை உண்டு மிகவும் பருத்து $\frac{1}{2}$ அங்குல மாகும்.

இவ்விதமான அவஸ்தை யில் 3-4 நாட்களிருந்து பிறகு இரண்டாம் அவஸ்தையாகிய உறங்கும் புழு என்னும் நிலைமையை அடைகிறது. இந்நிலைமையில் புழு ஒரு கூடு போன்ற தோலால் மூடப்பட்டிருக்கும். இக்கூட்டுள் இருக்

கும் புழு அசைவற்றும் உணவொன்றும் தின்னமலும் கிடப்ப தனல் உறங்கும் புழு அவஸ்தை என்று இந்நிலைமையைக் கூறி னேம். இவ்விதம் 3 நாள் தன் கூட்டுள் அசைவற்றிருக்கும். பிறகு புழுவின் உருவத்தை மாற்றி ஈ உருவத்தைப் பெற் றும், புழு அவஸ்தைக்கென்று ஏற்பட்ட பல உறுப்புகளை அழித்து ஈக்கு வேண்டிய உறுப்புகளாக மாற்றியும் சீக்கிரத் தில் ஈக்குழவி என்னும் பருவத்தை அடைகிறது. ஈக்குழவி கள் சீக்கிரம் முற்றிலும் வளர்ந்து ஈயின் உருவத்தைப்பெறும். இப்பருவத்தை பூச்சிப்பருவம் எனலாம். இப்பருவம் வந்த வுடன் கூட்டின் முன் பக்கத்தில் ஒரு மூடி போலிருக்கும் பாகத்தைத் திறந்து வெளிவரும். இவ்வாருக ஈக்களின் முட் டைகள் வெடித்து முழு அவஸ்தை நிலைமையில் சில நாட் கள் கழித்து, கூடுடைய, உறங்கும் புழு அவஸ்தை யில் சில தினங்கள் இருந்து பூச்சிப் பருவத்தை அடைகின்றன. இவ்வாறு முட்டை வெடித்துப் பிறந்தவுடன் தாயை உருவத் தில் ஒத்திராமல் வேறு உருவத்துடன் தோன்றி சிலநாட்கள் உண்டு திரிந்து பிறகு வேகமாகப் பல மாறுபாடுகளை அடை ந்து கடைசியாகத் தாய் உருவத்தைப் பெறும் பிராணிகள் அநேகம். உதாரணமாக, தவளை முட்டையினின்று வெளிப் பட்டவுடன் தவளையைப்போலிராமல் மீனைப்போலிருக்கிறது; வண்ணாத்திப்பூச்சி முட்டை வெடித்தவுடன் 3-ஜோடி கால்க ளுடைய புழு உருவத்துடன் தோன்றுகிறது. இவ்விதம் புதிய உருவத்துடன் ஜனித்துப் பிறகு தாயுருவமாக மாறுதற்கு ரூப பரிணாமம் என்று சொல்வர். இதுநிற்க.

(தொடரும்)

தில்லைக் கோவிந்தன்

Thillai Govindan

எட்டாவது அதிகாரம்.

பட்டப்பரீக்ஷைக்கு முந்திய என் படிப்புக்களைப் பற்றிக் கூறுவது.

என் சிற்றப்பன் மகாதேவன் ஒரு வருஷகாலமாய் எங்களுடன் தங்கி வாசித்துக் கொண்டிருந்தான். ஒரு வருஷம் தவறியபின், எனக்கு முந்திய வருஷத்தில் அவன் பிரவேசப் பரீக்ஷையில் தேறி, பின்பு, மூங்கிலூர் கலாசாலையில் படிக்க வந்திருந்தான். அவன் தாய்க்கு அது பிடிக்கவில்லை யெனினும், எங்கள் கூடத் தான் அவனிருக்க வேண்டுமென்று என் தகப்பனார் கட்டாயப்படுத்தினதால், எங்கள்வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு, வேறோரிடத்தில் வாடகைக்குக் கொண்ட அறையில் அவன் படித்து வந்தான். இதனால் நானும் அவனும் நெருங்கிப்பழக நேர்ந்தது. ஆயினும், எனக்கு ஏழுவயதுக்குப் பெரியவனும் முறையில் சிற்றப்பனும் ஆனபடியால், அவனிடம் நான் மரியாதையோடு நடந்துவந்தேன்; அவனுக்கு என்மீது அதிகப்பிரியம்; என்னை எப்பொழுதும் பக்ஷத்தோடு நடத்திவந்தான்; ஆயினும், நான்கூட இருக்கும்பொழுது அவன் தன் நாவையடக்கியே பேசுவதை நான் சீக்கிரம் தெரிந்து கொண்டேன். தன் தந்தையான என் பாட்டனாரால் அவன் அவர் இறக்கும் வரை குழந்தைப் பருவத்திலும் இளமையிலும் வைதீகானுஷ்டான முறைப்படி கண்டிப்பாய்வளர்க்கப்பட்டு வந்தவன். அவருடைய கண்டிப்பான மேற்பார்வை

திடீரென நீங்கவே, பளு நீங்கின வில் மெத்தையைப்போல் அவனுக்கு இயற்கையில் ஏற்பட்ட உற்சாகம் துணிவு முதலிய குணங்கள் குதித்தெழும்பி மேலிட்டு விளங்கலாயின. அவன் நல்ல புத்திசாலி; அவனுடன் சேர்ந்து பழகுவது மனோரம்மி யமாயிருக்கும்; சிலசமயங்களில், உக்கிரமான குணவிகாரங்க ளும் அடக்க முடியாத கோபதாபங்களும் உற்சாகமும் அவ னுக்குக் கிளம்பிவிடும். ஆயினும் அவன் இருதயம் மொத்தத் தில் நல்லதே; மிக்க உதார குணமும் கை தாராளமு முடைய வனே அவன். ஊரை விட்டு நெடுநாள் நீங்கியிருப்பது என் தகப்பனுருக்கு அசௌகரியமாயிருந்தது; ஆகவே, மூங்கிலூ ரில் என் சிற்றப்பன் மேற்பார்வையில் என்னை விட்டு விட்டு தம் குடும்பத்துடன் அவர் தில்லைக்குப் போய்விட்டார். இடை யே வாயிலுள்ள இரண்டு சேர்ந்த அறைகளில், என் சிற்றப் பனும் அவனுடைய சகபாடி ஒருவனும் ஓர் அறையிலும், நா னும் எனது நண்பன் பம்பாவும் ஓர் அறையிலுமாக இருந்து வந்தோம். நாங்கள் எல்லோரும் ஒரு பிராமணன் வைத்திருந்த சாப்பாட்டு விடுதியில் சாப்பிட்டோம். அவ்விடுதியில் உண் போர் யாவர்க்கும் என் சிற்றப்பனே தலைவன் போலிருந்தான். காதலையும் அதனுல் விளையும் அருமையையும் பற்றி எல்லை வரம்பின்றி மனப்பாடமாக அவன் ஒப்பிக்கும் ஸம்ஸ்கிருத சுலோகங்களும், அவனுடைய இரக்க மிகுந்த இருதயமும் உதாரகுணமும், இவற்றையெல்லாம் விட, போனவிடமெல்லாம் உற்சாகத்தையும் ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணும் அவ னுடைய அழகிய சிரித்த முகமும், எங்கும் யாவரும் அவனை மகிழ்ந்தேற்று, அவன்மேல் பிரியங்கொள்ளும்படி செய்தன. மற்றைப் பிள்ளைகள் பலருக்குப் போலவே எனக்கும் அதிசீக் கிரத்தில் அவன், சிறந்த முன்மாதிரியும், உள்ளம் உவந்து போற்றும் ஒரு வழிபடு தெய்வமும் போல் ஆகிவிட்டான்.

இஃதோடு அவன் என்சிற்றப்பனுயு மிருந்தபடியால், அவனை என் சொந்த உடைமையாகவே கருதி என் சிநேகிதர் எவரி டத்திலேனும் அதிக பிரியத்தை அவன் வெளியிட்டால் நான் பொறுமைப் படலானேன். இவ்வாறு நாங்கள் ஒரு வருஷமே சேர்ந்திருந்தோம். ஏனெனில், அடுத்த ஆண்டில் இஞ்சினீரிங் கலாசாலையில் படிக்க அவன் சென்னை சென்று விட்டான்' அந்த ஒரு வருஷத்தில் அவனே என் படிப்பினைகளையும் அபிப்பிராயங்களையும் நெறிப்படுத்தி, என்றுமே அழியாதவாறு எனது சுவபாவ குணத்திலும் அவனுடைய மனச்சுவடு பதியும்படி செய்துவிட்டான். அது காறும், நான் ஒரு சாதாரண பிராமணச் சிறுவனுயிருந்தேன்: மந்திரங்களின் அர்த்தம் தெரியாவிட்டாலும், தவறாமல் மூச்சந்தியும் சந்தியாவந்தனம் செய்து வந்தேன்; ஹிந்துக்கள் சாதாரணமாய் வழிபடும் கடவுளர்கள், குலதெய்வங்கள், பைசாசங்கள், குளிரால் விறைத்த பாப்பாப் பாட்டியின் பிதிர்தெய்வம் போன்ற இதரதேவதைகள் யாவற்றிலும், புத்திபூர்வகமான ஆராய்ச்சியால் ஏற்படாததாயினும் எனக்கு முழு நம்பிக்கையுண்டு; தொட்டில் தொட்டு நான் பழகி உள்ளாகி வந்திருந்த எண்ணிறந்த அஞ்ஞானங்களையும் ஐதீக சாங்கியங்களையும் அனுசரித்தே நடந்துவந்தேன்; தெளிவான காரணமின்றியே ஜாதிவேற்றுமை சிசு விவாகம், நிர்ப்பந்தமான வைதவ்யம், பெண்களின் தாழ்ச்சி, ஐக்கிய குடும்பவாழ்க்கை முதலிய கட்டுப்பாடுகள் மகரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டவை, திருத்தவோ அபிவிருத்திசெய்யவோ முடியாத ஒப்புயர்வற்ற சிறந்த ஏற்பாடுகள் என்று மதித்து வந்தேன்; இவ்வெல்லா அம்சங்களிலும் நான் அதுகாறும் ஒரு சாதாரணமான பிராமணவாலிபனுவே இருந்தேன். இக்கொள்கைகளெல்லாம், எனது சிற்றப்பனது பழக்கத்தினுல், வெகு சீக்கிரத்தில் மாறிவிட்டன. அவனுடைய

போதனைப்படி அமெரிக்க ஐரோப்பிய நாஸ்திகவாதிகளின் கிரந்தங்களை நான் மனமகிழ்ந்து படிக்கலானேன். அந்தக் கிரந்தங்கள் என் அகக்கண்முன் ஒரு புதிதான அழகிய பிரதேசம் திடீரெனத் தோன்றியது போலிருந்தன. பழைய விலங்குகளை யெல்லாம் முறித்தெறிந்து விடுதலை பெற்ற என் புத்தி அந்தப் பிரதேசத்தில் தங்கு தடையின்றி யதேச்சை யாய்த் திரியலாயிற்று. டிண்டல், ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர் என்ப வர்களின் கிரந்தங்களையும் பின்பு நான் படித்தேன். அக்கால த்தில் கண்கவர் காந்தியொடு விளங்கிய இங்கர்ஸால் என்ப வரையே நான் வழிபடுதெய்வமாகக் கொண்டாடி வந்தேன்; அவரெழுதிய நூல்களே நான் அத்தியயனஞ் செய்யும் வேத சாஸ்திரங்களாயின. மனத்தைக் கெட்டவழியில் புகுத்துந் தூர்த்த எண்ணங்களைக் கிளப்பி மதியைமயக்கும் ரேனால்ட்ஸ் என்பவரது சித்திரப்படங்களோடு கூடிய நாவல்களையும் சிற ந்த இலக்கியங்களாக நான் வாசிக்கலானேன். இதனால் துன் மார்க்க ஒழுக்கத்தையும் பழிபாவங்களையும் நான் அறியலா னேன். ஒவ்வொரு வாரமும் எனது சிற்றப்பன் அறையில் நாஸ்திக வாத சங்க மொன்று கூடுவதுண்டு. வாரந் தப்பாமல் அக்கூட்டத்திற்குச் சென்று, கண்ணுக்குப் புலப்படாத முழு முதற்கடவுளின் தலையின்மீது இடி முழக்கத்தோடு கூடிய சோனை மாரிபோல் அச்சங்கத்தார் பொழிந்த வசைகளையும் சாபங்களையும்,[1] நமது ஜனசமூக ஏற்பாடுகள் ஆசார அனுஷ் டான முறைகளை யெல்லாம் சின்னு பின்னமாகும்படி அவர் கள் வெட்டிப் பிளந்து, அவற்றின் ஆபாசங்களை எடுத்து விளக்கிய பிரசங்கங்களையும் நான் செவியாரக் கேட்கலா னேன். இவற்றின் பலனாக, எப். ஏ. பரீக்ஷை தேறி மேற் படிக்க நான் சென்னைக்குச் சென்று மீண்டும் என் சிற்றப் பனைச் சேர்ந்த பொழுது, அவனுடைய மனத்துக்கு முற்றும்

இசைந்த வனாயிருந்தேன்:—சந்தியாவந்தனங்களை யெல்லாம் கட்டிவைத்து நெடுநாளாய்விட்டது; புராதனமான ஏற்பாடுகள் வழக்கங்களை யெல்லாம் முழுமனத்தோடும் வெறுத்து இகழ்ந்தேன்; யௌவன திசைக்குரிய நாணமும் கூச்சமும் ஒருவாறு மழுங்கி, ஒரு வேசியின் ஸ்பரிசம் அசங்கியமானது என்னும் உணர்ச்சியையும் இழந்து விட்டேன். ரேனால்ட்ஸ் நாவலரின் புண்ணியம், என் அங்கங்களிலும் ஒரு மாறுபாடு ஏற்பட்டிருந்தது: நுண்ணிய அச்சுப்பதிப்பின் அவருடைய கிரந்தங்களைப் படித்துப் படித்து என் கண் கெட்டுப்போய், சென்னை சேர்ந்தவுடன் முதல் வேலையாகக் கண்வைத்தியம் செய்து சுலோசனங்கள் தரித்துக்கொள்வது அவசியமாயிற்று.

ஸாவொனரோலா

Girolamo Savonarola

ஸ்ரீமான் T. R. ராஜகோபாலையர் எழுதியது.

ஐரோப்பிய சரித்திரத்தில் இருண்டகால (Dark Ages) மெனச் சில சரித ஆசிரியர்களால் கூறப்படும் காலம் நீங்கி, புதுப் பிறவிக்காலம் (The Renaissance) என்னும் காலம் பிறக்கவே, மான்யமுறை (Feudal system) கீழடைந்து, ராஜாங்கமுறைமைகளும் மாறுபட்டு, புதிய நாகரிகம் தோன்றி வளர வாரம்பித்தது. புதிய பிரதேசங்கள் கண்டு பிடிக்கப் பட்டு, வியாபாரம் விர்த்தியாகி, வணிகர்கள் தொகையும் அவர் வர்த்தகஞ் செய்தற்குரிய போக்குவரவு வழிகளும் பெருகவே அவர்களிற் பலர் செல்வர்களாயினர். சித்திரம் (Painting) சிற்பம் (Sculpture) இன்னு மிவைபோன்ற ஏனைய லலித வித்தைகள் மேலோங்கி வளர்ந்து வியாபித்தன. ஆழ்ந்து பரந்த ஞானத்தைப் பெற்று இனித்திருக்கவேண்டு மென்ற பேரவா மக்கள் மனதில் உதிக்கவே, பெட்டிபேழைக ளில் உக்கிமக்கிக் கிடந்த பழைய நூல்களை யெல்லாம் வெளிக் கொணர்ந்து ஒருங்கு திரட்டி ஆராய்ந்தறிதற் பொருட்டு அறிஞர் பலர் முன் வந்தனர் இச்சமயத்தில், அச்சியந்திரங் களும் கண்டு பிடிக்கப்பட்டமையால் புராதன இலக்கியங்க ளெல்லாம் அச்சியந்திரத்திலேறி மலிந்து பெருகின. கல்விய றிவு முதிரவே, ஐரோப்பாகண்டத்தை உன்னதமான நிலைமை யில் ஸ்தாபிக்கவேண்டு மென்ற ஆசை மேற்கிளம்பிற்று. அக் காலத்தில் இப்பிரயத்னங்களுக்குத் தலைமை வகித்துழைத் தது இத்தாலியா தேசம். நானாவித வித்தைகளையும், தொழில்

களையும், மனக்கிளர்ச்சிகளையும் அபிவிர்த்தி செய்வதில் இத்தாலியாவின் சீமான்களெல்லாரும் மிகுந்த ஊக்கத்துடன் ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுச் சகிக்காது உழைத்துவந்தார்கள். மேலும் கி. பி. 1453-ம் வருஷத்தில் ரோமராஜ்ஜியத்தின் கீழ்ப்பகுதியின் தலைநகரான கான்ஸ்டான்டிநோபில் (Constantinople) என்ற பட்டினம் துருக்கர் (Turks) வசமானவுடன், ஆங்கிருந்த கிரேக்க நாட்டுப் புலவர்கள் இத்தாலியாவில் குடியேறி, க்ரீஸ் தேசத்தின் பேராசிரியர்களின் சிறந்த நூல்களை இத்தாலியாவில் பரவச்செய்து, அத்தேசத்தினரின் மனப்போக்கைத் தெளிவித் துயர்த்தினார்கள். அந்நாள் வரையிலும் பிரபலமாயிருந்த ரோமன் காதொலிக் மதம் (Roman Catholicism) அம்மத குருக்களின் அவிவேக போதனைகளால் ஐரோப்பாவிலிருந்து சுதந்தரம், விவேகம் என்பன வற்றைத் துரத்தி இம்மைப் போகங்களை மக்கள் வெறுக்கவேண்டு மெனக்கூறி ஜனங்களை உபயோகமற்றவர்களாகச்செய்து விட்டது. ஆகிலும், மேற்கூறிய நூதன நன்னிமித்தங்கள் நாட்டில் வேரூன்றி வந்தமையால், மதத்துவேஷமும் இகலோக சுக சௌகரியங்களை அநுபவிக்கவேண்டு மென்ற இச்சையும், சுதந்தரப்பிரியமும் வெளித்தோன்றின.

எல்லாக் காவியங்களையும் இத்தாலியர்கள் பழுதறப் பரிசோதித்துப் பார்த்து விவேகிகளான போதிலும், மெய்யறநெறியினின்று வழுவி, தன்னடக்கம், பக்தி, வாய்மை முதலானவைகளைக் கைந்நெகிழவிட்டு வாழ்ந்து வந்தனர். செயற்கை யழகை விரும்பி இயற்கை இன்பங்களைத் துறந்தனர். பார்வைக்கும் கேள்விக்கும் சிங்காரம், சுகம், சௌகரியம் இவற்றைப் பயப்பனவற்றையே பின்பற்றி, மனத்தைத் தூய்மைப்படுத்தி மேலேற உதவுவனவற்றில் பிரவர்த்திக்க மன

மற்றிருந்தனர். கல்வி யறிவும், வெளிப்பகட்டுமே பிரதான மெனப் பாவித்து இனிமையையும், தூய்மையையும், நேர்மை யையுமே கைவிட்டனர். விவேகமும், கண்டவை கேட்டவை, நினைப்பவைகளைச் செய்வதற்குரிய சுதந்தரமும் அதிகரிக்க வே துராசைகளாலும், கெட்டகுணங்களாலும் கவரப்பட்டு பொறுத்தற்கியலாத அக்கிரமங்களிலுழன்று மன்பதையின் உயர்ந்த பதவியையும், இவ்வுலக வாழ்க்கையின் உள்ளக்கருத் தையும் மறந்தும் பழித்தும் வந்தார்கள். மதவிசுவாசம் நசிக் கவே நாஸ்திகம் மேலடைந்து தீமைகளைச் செய்வதனாலுண் டாகும் பராபரத்தின் மீதுள்ள பயம் ஒழிந்து ஒப்புயர்வில் லாத சீரிய குண வொழுக்கம் பொருந்தியவர்போல வெளிக் குத் தோன்றினும் உண்மையில், புலி, ஓநாய், சர்ப்பங்களுக் குங் கீழானவர்களாக மழுங்கினர்கள். சுருங்கச் சொல்லின் காலமாகிய தறியில் காமம் வஞ்சகம் கபடம் கொலை முதலான நூல்களாலும் கல்வித்தேர்ச்சி சிங்கார வித்தைகளில் முதிர்ச்சியாகிய பாவுநூல்களாலும் நெய்யப்பட்ட ஆடையைப் போர்த்துத் திரிந்து வந்தார்கள். அக்காலத்திய இத்தாலியா வில் சுய போகங்களிலழுந்திக் களிக்கும் குடிகளைப் போலவே ராஜ்யாதிபதிகளும் கிறிஸ்துவமதத் தலைவர்களும் கூட லௌ கிக சிந்தனை, சுயலாபம், மோசம், குரூரம், அதிகாரப் பிரியம் பொருளாசை, ஆடம்பரம் முதலானவைகளையே நிரம்பப் பெ ற்றிருந்தனர்.

அறநெறி பிறழ்ந்து, கடவுள் விசுவாசம் குறைந்து, தன் னடக்கம் சிறிதுமின்றி வாழும் நாட்டினர் நாளடைவில் அல மந்து வாடிமடிய வேண்டுமென்ற பேருண்மை மலைமேலிட்ட தீபம்போல் யாவர்க்கும் தெளிவாகத் தெரிந்ததாகும். மேலும் சிறுகிய அறிவும் குறுகிய தொழிலுமுடைய புன்மாக்கள் அவ்

விபரீதங்களி லகப்பட்டுத் தத்தளிக்கையில், ஸர்வஜ்ஞனை ஜகதீசன் அவரைத் திருத்தி நல்வழியிலிடும் பொருட்டு, கருணைகூர்ந்து, அத்தகை யாளர்களுக்குள்ளிருந்தே ஒரு போராளனைத் தெரிந்தெடுத்து அவனைக்கொண்டு அக்கிழ்மக்கள் உய்யுமாறு உதவிபுரிந்து வருகிறார் என்பதும் யாவரும் அறிந்துணர்ந்த விஷயமாகும். இக்காலத்து இங்ஙனம் தெரிந்தெடுக்கப்பட்டவர் நமது ஸாவொனரோலா.

இத்தாலியாவின் மேற்கூறிய இழிய நிலைமையையும் இதனின்று ஐரோப்பா கண்டத்திற்கே பின் உண்டாகக் கூடிய தீமைகளையும் முன்னதாக நன்குணர்ந்தறிந்து அவைகளைச் செம்மைப் படுத்தும் பொருட்டுத் தோன்றிய இப்பெருமான் இளமை முதற்கொண்டே தன்னைச் சுற்றி நடந்து வரும் அநியாயங்களைக் கண்ணுற்று, வருத்தமடைந்து சுயசிந்தனையையொடுக்கி தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தனது தேசத்தினரின் நன்மைக்காகவே முற்றிலும் தியாகஞ் செய்து உழைத்துவந்தனர். சபல புத்தியினாலும், இறுமாப்பினாலும், பீடிக்கப்பட்டு அதர்மமான மார்க்கத்திற் புகுந்துழல்வோர் மத்தியில் கதிரவன்போல் தோன்றி சத்தியம், நியாயம், தர்மமெனும் வலிய கிரணங்களை நாலாபக்கங்களிலும் பரப்பி, முன் சொல்லிய விபத்துக்களை யகற்றியவர் இவர்தாம். இவர் தர்மக் கொடியை நாட்டிய இணையில்லாத் தீர்க்கதரிசி (Prophet of Righteousness). உழுது வாழ்பவன் முதல் நாடாள்வோன் வரையிலும், அறிவிலி முதல் கிறிஸ்துவமதப் பிரதானி (Pope) முடிய, யாவரையும் சமமாகப் பாவித்து, அவர்களுடைய குற்றங்குறைகளை எடுத்துக்கூறி அவைகளிலிருந்து விடுபட்டுமிக்க மேலான தெய்வத் தன்மையை பெறும்பொருட்டு உழைத்தமாண்பினர். புராதன ஞானிகளின் தத்துவ சாஸ்திரங்களைக் கச

டறக்கற்றவர்: அக்காலத்தில் வெளிப்பட்ட புதுமைகளை ஓர்ந்தறிந்த பேரறிவாளர்: தர்மத்தின் மேன்மையையும், தூய்மைவாய் மைகளின்சிறப்பையும், பக்தியின் வன்மையையும் பன்முறைத் தைரியமாய்ப் போதித்து வந்த அறவோர்: துரான்மார்களும், துஷ்டர்களும் அவமதித்துப் பழித்து ஹிம்ஸித்து வந்தபோதிலும், அவற்றைப்பொறுத்து உண்மை நெறியைப் பகிரங்கப்படுத்தியவர். இத்தகைய பெருந்தன்மை பொருந்திய இவரைப் பழித்து, இவரது போதனைகளை மறந்து இவரது உடலுக்கே தீங்கிழைக்கத் துணிந்தனர் அக்காலத்துள்ள பேதைகள். இவரது வாயைமூடப் பெரிதும் அவர் முயன்றாராயினும், இவருடைய மனத்தை யடக்கச் சிறிதும் முடியாமற்போயிற்று. இவருடைய உடலை அக்குரூபிகள் சிறையிலிட்டனர். ஆனால் இவருடைய ஹ்ருதயத்திலிருந்து எழும்பி நாலாபக்கத்திலும் இழிந்தோடிய தர்மவெள்ளத்தை அவர்களால் கட்டக்கூடவில்லை. கடைசியில், இவரைக் கொலைசெய்தார்கள். ஆனால் அமிர்த கலசம்போன்ற இவருடைய நெஞ்சத்தினின்று ததும்பிய ஹிதோபதேசங்களை மறைத்து மடியச்செய்தார்களில்லை! காலவிடங்களால் கட்டுண்டு அலக்கண்ணுறும் கயவர்க்கு அவை இயலாத காரியங்களாகும்.

கி. பி. 1452-ம் வருடம் செப்டம்பர் மாதம் 14-ந் தேதியில், பெராராவில் (Ferrara) மைக்கெல் ஸாவொனரோலாவுக்கும் (Michele Savonarola) எலினு போனக்கோஸி (Elena Bonaccossi) என்றவளுக்கும் பிள்ளைப்பேறு கிடைத்தது. குழந்தைக்கு ஜிரோலேமோ ஸாவொனரோலா என்று பெயரிட்டு மகிழ்ந்தனர். இளம்பிராய முதற்கொண்டே ஆடல் பாடல் விளையாட்டுகளில் பிரவிர்த்திக்காது, அவ்வூரார் அநுசரித்துவந்த ஆசார வுபசாரங்களையும் வீண் டம்பங்

களையும் வெறுத்து, மறமலிந்த இவ்வுலக வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பதிலும், தத்துவஞான நூற்களைப்படிப்பதிலுமே தன் காலத்தைக் கழித்துவந்தார். நாள் செல்லச் செல்ல இவருடைய மனோ வியாகூலம் அதிகரிக்கவே இவர் இல்லத்தினின்று வெளியோடி, உண்மை நெறி கண்டு அதைப்பிறர்க்கு உபதேசிக்க வேண்டுமெனக் கொண்டு இதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இவர் 1472-ம் வருடத்தில் டீ ருயினு மண்டி (De Ruina Mundi) என்ற காவிய மொன்றை எழுதினர். தெய்வம் ஒன்று உண்டென்பதை இத்தாலியர்கள் முற்றும் மறந்து காமக் குரோதாதிகளில் உழன்று வரவே அறத்தின் சக்தி மழுங்கி கசடர்கள் சகித்து நல்லோர்கள் வாடிவதங்குவதையும், விதவைகளையும் அனாதைகளையும் காப்பாற்றுவதற்கு ஏற்பட்ட ராஜ்ய தந்திரிகளும் மதஸ்தர்களும் அவர்களைக் குரூரமாக நடத்தித் தாம் மட்டும் ரமித்துவருவதையும் பார்த்தபொழுது மனமுருகி மேற்கூறிய காவியத்தைப் பிரசுரித்தார். இங்ஙனம் துயரக் கடலில் அழுந்தி அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு நாள் சந்நியாசி ஒருவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு மனந்தெளிந்து தாமும் இனித் துறவியாகவேண்டுமென நிருணயித்து தன் வீட்டிற்கு வந்து அதைப் பற்றியே ஆலோசித்துக் கொண்டிருக்கையில் ஐயமும் சஞ்சலமும் மேலடைந்து இவரை வருத்தியதால், அவைகளைப் போக்கி மனச்சாந்தி பெறும் பொருட்டுத் தன் வீணையை யெடுத்துச் சோகரசம் மிக்கதான பாடலொன்றைப் பாடுகையில், அருகிலிருந்த இவருடைய தாயார் அதைச் செவிசாய்த்துக் கேட்டுத் துக்கித்து, இவரைப் பார்த்து "என் அருமைப் புதல்வனே! இவ்வோசை இனி நமக்கு உண்டாகும் பிரிவை அறிவிக்கும் குறிபோலும்" என்றனள்.

1475-ம் வருடம் ஏப்ரல் மாதம் 24-ந் தேதியில் ஒரு பெரும் பண்டிகையன்று இருபத்தெட்டு மைல்தூரம் கால் நடையாகச் சென்று போலோனா (Bologna) என்ற இடத்திலுள்ள ஒரு கிறிஸ்தவமடத்தின் (Dominican convent) அங்கத்தினராகச் சேர்ந்தார். இவர் போயினபின் இவருடைய பெற்றோர்கள் சண்டமாருதத்தினால் தாக்குண்ட இளவாழை போல் வருந்தினார்களாம். இவர் படித்துவந்த புத்தகங்களை அவர்கள் பரிசோதிக்கையில் உலக வெறுப்பு என்ற சிறு வியாசமொன்றைக் கண்ணுற்றார்கள். அதிலடங்கிய விஷயங்களாவன: எங்கு பார்த்தாலும் அபக்தியும் வட்டிக்கு வட்டியாகப் பொருள் கொடுத்து வாங்குவது விபசாரமும் அழுக்காறும், மமதையும், வஞ்சகமும், பொய்யும், கொலையும், களவும், நானாவித அசுத்தங்களுமே நிறைந்து நிற்கின்றன. அறங்கள் மறங்களாகவும், மறங்கள் அறங்களாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. பூகம்பம், கடும்புயல், இன்னுமிவைபோன்ற இதர அபாயங்களால், மனிதர்கள் சிக்ஷிக்கப்பட்டும் மெய்ந்நெறிகண்டு உய்ய மனமில்லாது அவர்கள் ஜீவித்து வருகிறார்கள். பஞ்சம், வெள்ளம், வியாதிகளால் அவதிப்பட்டும், தம் குற்றத்திற்காக அநுதபித்து அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுகிறார்களில்லை! கடவுளடியார்களால் நன்னெறி தெரிவிக்கப்பட்டும் அதை அவமதித்து, அவ்வடியார்களை மானபங்கஞ் செய்து அழிகிறார்கள்! இத்தகைய உலகில் வாழ்வது மிகக் கொடுமையானது. ஆதலினாற்றான், தான் துறவறத்தை மேற்கொண்டதாக இவர் அறிவித்திருக்கிறார்.

(தொடரும்.)

வெக்கை நோய்

Rinderpest

[சென்னை பப்ளிசிடி பீரோவால் அனுப்பப்பட்ட மதராஸ் லிஸில் வெட்டிரினரி டிபார்ட்மென்டாரின் துண்டுப் பிரசுரத்தினின்றும் தொகுத் தெழுதப்பட்டது *]

கால்நடை மஹாமாரி எனப்படும் வெக்கை நோயானது மாடுகளையும் எருமைகளையும் பீடிக்கவல்ல தொற்று வியாதி. இது முதலில் ஒன்றிரண்டு பிராணிகளையே பற்றினும் வெகு சீக்கிரம் தொற்றிப் பரவி விடுகின்றது.

நோய்க் குறிகள். அவை வருமாறு: முதலில் கொடூரமான சுரம், சோர்வு, உடம்பு உரோமம் சிலிர்த்தல், நடுக்கம், முகம் வறண்டுபோதல், தீனி தின்னாமை, அசைபோடாமை முதலியன. சுரம் 103 டிகிரியிலிருந்து 106 டிகிரிவரை யிருக்கும். மேலும் ஒன்றிரண்டு நாட்களுக்குள் வாயினின்று நீர் வடியும், உதடுகளின் உட்புறங்களிலும், கீழ் அலகின் ஈறுகளிலும், மேல் அலகின் உட்புறத்திலும், நாவின் பக்கங்களிலும் அடியிலும், வாயின்மேல் பாகத்திலும் கோதுமைத் தவிடு போன்ற சிறு கொப்புளங்கள் உண்டாகும். இக் கொப்புளங்களின் மேல் தோலை உரித்தால் அவை உள்சிவந்தும் இரத்தச் சுரப்புள்ளனவாயும் காணப்படுவன. தீராத் தாகமும், மலச்சிக்கும் இருந்துகொண்டே யிருக்கும். நான்காவது நாள் கண்ணி

---

* இத்துண்டு பத்திரிகை முழுமையையும் படிக்க விரும்புவோர் சென்னை, எழும்பூர், கம்மான்டர்-இன்-சீப் ரோட்டில், இருக்கும் பப்லிஸிடி ஆபீஸருக்கு எழுதி இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

னின்று ஓயாது நீர்வடியும். இந்நீர் படும்இடங்களிலுள்ள உரோமம் உதிர்ந்துபோம். மேலும் வயிற்றோட்டம் உண்டாகும். வியாதி முற்ற முற்ற வயிற்றுப் போக்கு அதிகப்படும். மலத்தோடு இரத்தம் கலந்திருக்கும், துர் நாற்றம் வீசும், மலமும் தானாகவே கழிந்துகொண்டிருக்கும். பலம் குன்றும். பொதுவாக நோயுற்ற பிராணியும் ஒரு வாரம் அல்லது பத்து நாளில் இறந்து போம். சிற்சில சமயங்களில் வியாதியின் கொடுமையை ஆற்றாது மூன்று நான்கு நாட்களில் இறப்பது முண்டு.

பிணப்பரிசோதனையினால் இந் நோயுற்ற பிராணிகளின் நான்காவது இரப்பையின் உட்புறமும், சிறு குடலின் முன் பகுதியின் உட்புறமும் வீங்கியும், கறும்சிவப்பு நிறமுள்ளனவாயும், கொர்தபுண்களை உடையனவாயு மிருக்கின்றன வென்று ஏற்பட்டிருக்கிறது.

நோயின்காரணம்.

இந் நோய் ஒரு வகை விஷப்பூச்சியினால் விளைக்கப்படுகின்ற தென்று நிச்சயிக்கமுடிகிறது. அதன் குணுகுணங்களை இன்னும் முற்றிலும் அறியக்கூடவில்லை. நோயுற்ற பிராணிகளின் வாயினின்றும் மூக்கினின்றும் வடியும் நீரிலும், மலத்திலும், சிறு நீரிலும் இப்பூச்சி காணப்படுகிறது. நிழலில் சுமார் இரண்டு இரண்டரை நாள் உயிருடனிருக்கும். காற்றும் வெயிலும் பட்டால் 12 மணி நேரத்துக்குள் நோயைப் பெருக்கும் வல்லமையற்று மாண்டுபோகிறது. மேலும் பிராணியின் தசை, எலும்பு, இரத்தங்களிலும் இப் பூச்சி காணப்படுகிறது. இவற்றில் இது சில மாதகாலம் உயிருடனிருக்கிறது.

நோய் பரவும் வகை.

மேற் கூறப்பட்ட வாய் நீர், மூக்கு நீர் முதலியவற்றைத் தீண்டி அசுத்தபட்ட மனிதர்களும், நாய், நரி, பறவைகளும் நோய்ப் பூச்சியின் வாகனமாகி அதை ஓரிடத்திலிருந்து மற்

ருேரிடத்துக்குச் சுமந்து செல்கின்றனர். மனிதர்களின் உடை, செருப்பு முதலியவையும் புல் வைக்கோல் முதலிய தீனிகளும், அவை வைக்குமிடங்களும், நுகம், சக்கிரம் முதலிய வண்டியுறுப்புக்களும், தார்க்கம்பு, பூட்டும்தும்பு முதலியவையும் இந் நோய்ப் பூச்சியை ஒரு பிராணியிடமிருந்து மற்ருென்றினிடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. நோயுற்ற ஜந்துக்களைத் தீண்டுவதால் முக்கியமாக இந்நோய் பரவுகிறது.

நோய் பரவுதற்கு இன்னொரு காரணம் தூரமான காடுகளுக்கு மேய்ச்சலுக்காகப் போன கால் நடைகள் இந்நோய் பூச்சிகளைக் கொண்டுவருவது.

ஒரு கிராமத்தின் வழியாக மற்றொரு கிராமத்துக்குச் செல்லும் ஆட்டு மந்தைகளும் இந் நோயைப் பரவச் செய்யக் கூடும்.

இந் நோய் பரவாது தடுக்கும் உபாயங்கள்: முதலாவது சேர்க்கையைத் தடுப்பது: குடியானவர்கள் ஒரு இடத்தில் வெக்கைநோய் இருப்பதாய்க் கேள்விப் பட்டால் ஷை நோய் மாறும் வரை, அந்த இடத்திற்குத் தங்கள் பிராணிகளைக் கொண்டு போவதையும் தாங்கள் போவதையுமே கூடியவரையில் நிறுத்தி விடவேண்டும். மேலும் அந்த இடத்திலிருந்து ஷை நோயை உண்டாக்கக் கூடிய பிராணியையோ, அல்லது அது தீண்டிய சாமானையோ வராதபடி முற்றிலும் தடுத்துவிடவேண்டும்.

இரண்டாவது, நோய் வித்தைத் தொலைப்பது. எந்தக் காரணத்தாலாவது சாமான்கள் மேற் கூறியவற்ருல் அசுத்தப் படுத்தப்பட்டால் அவற்றை பினைல் தைலம் போன்ற மருந்துகளால் கழுவிச் சுத்தப்படுத்திச் சூரிய வெப்பத்தில் காய வைக்கவேண்டும். இதனுல் நோய் விளைக்கும் பூச்சிகள் இறந்து போகின்றன.

வெக்கை நோயால் இறந்த பிராணிகளின் தோலை உரிக்காமல் அவற்றை தகனம் செய்யவேண்டும், அல்லது புதைத்துவிடவேண்டும். சக்கிலியர் முதலானவர் தோலை விரும்பித் தோண்டி எடுக்காவண்ணம் ஆழமாகக் குழிதோண்டி, தோலைத் தாறுமாறாகக் கிழித்து அதைச் சுண்ணாம்பினால் மூடி, அதன்மேல் மண்ணைப் போட்டு மூடவேண்டும்.

நோயினால் பிடிக்கப்பட்ட பிராணியின் சாணமும் கக்கலும் எரிக்கப் படவேண்டும். ஷை பிராணியை வைத்திருந்த சாலையிலும் அதற்கு உபயோகப்படுத்திய கயிறு துணி, தீனித் தொட்டி முதலியவற்றை பினால் தைலத்தால் கழுவி, குறைந்தது மூன்று நாட்களாவது வெயில் படும்படி வைக்கவேண்டும்.

மூன்றாவது, அம்மை வைப்பது;—இந் நோய்க்கென்று பிரத்தியேகமாய் அம்மை வைப்பது சில காலமாய் நடந்து வருகிறது. இதனால் மிகுந்த நன்மையே உண்டாகிறது. அம்மை வைக்கப்பட்ட அன்றே எருதுகளை வேலைக்கு உபயோகிக்கலாம். சினைமாடுகளுக்கும் கூட யாதொரு தொந்திரவும் ஏற்படுகிறதில்லை. பொதுவாக அம்மை வைக்கப்பட்ட பிராணிகளுக்கு இந் நோய் கண்டாலும் இலகுவாகப் போய்விடுகிறது. ஆனால் இதன் குணம் ஒரு மாதம் வரை தான். ஆகையால் இந் நோய்கண்ட பிரதேசங்களில் மாதம் ஒருமுறை தவறாமல் மறு அம்மை வைப்பது உசிதம்.

நான்காவது, நோயைச் சிறுகவிளைப்பது. ஒரு பிராணி வெக்கை நோயால் பிடிக்கப்பட்டுக் குணமடைந்து விட்டால் அது மறுபடி ஷை நோயால் பிடிக்கப்படுவதில்லை. ஆதலால் முதன் முதலில் ஒரு பிராணிக்கு முதலாவது அம்மை வைத்துப் பாதுகாத்த பிறகு இந்நோயின் விஷப் பூச்சி கலந்த

இரத்தத்தைக் கொண்டு அம்மை வைத்தால் அப் பிராணி மட்டாக நோயுண்டு குணமடைந்து விடுகிறது. பிறகு அதன் ஆயுள் பரியந்தம் அது இந்நோயால் பீடிக்கப்படுவதில்லை.

சிகிச்சை முறை:—இந்நோய் மிகுதியான பலவீனத்தைத் தருவதாகையால் நோயுற்ற பிராணிகளுக்கு சுரம் கண்டவுடன் மலச்சிக்கைத் தடுப்பதற்காக அரை பாட்டில் அல்லது இரண்டு ஆழாக்கு யாளி விரை எண்ணெயையாவது விளக்கெண்ணெயை யாவது கொடுப்பது நல்லது. இலகுவாய் ஜீரணமாகக்கூடிய தீனிகளை அவை விரும்பித் தின்னுமளவு கொடுப்பது அவசியம். சிலர் தீனியும் தண்ணீரும் கொடுக்காதது நன்று என்று நினைப்பது பெரும் பிழை. வேண்டு மளவு தண்ணீர் கொடுக்க வேண்டும். இலேசாகச் சுடவைத்த சுத்தமான நீரைக் கொடுப்பதும் அவசியம். வைக்கோல் போன்ற கரடு முரடான உணவுகளை அகற்றி, அரிசிக் கஞ்சி அல்லது யாளி விரைக் கஞ்சியோடு சிறிது உப்புக்கலந்து 3 அல்லது 4 மணிக்கொரு முறை கொடுக்க வேண்டும், கொஞ்சம் பாலும் கலந்து கொடுத்தல் நலம்.

வயிற்றோட்டமும் பலவீனமும் இருப்பின் அரை அல்லது ஒரு ஆழாக்கு சாராயமும், அரைத் தோலா இடை சுக்குத்தூளும் ஒரு பாட்டில் கஞ்சியில் கலந்து நான்கு மணிக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும்.

வயிற்றோட்டம் நின்றது முதல் நோய் குணமாகும் வரை இளம் பச்சைப் புல்லையும் லூசர்ன் முதலிய புல்லுகளையும் கஞ்சி யோடு கலந்து கொடுக்கலாம்.

நோயுற்ற பிராணியைப் பகலில் வெயில்படாமலும், இரவில் குளிரிலிருந்து கம்பளியால் மூடியும் பாதுகாப்பது அவசியம். இந்நோய் கண்டவுடன் தாசில்தாருக்கு அறிக்கை செய்ய வேண்டியது கிராம மணியகாரரின் கடமை.

Tamil Classics.

தமிழ்ச் செல்வம்

---

51. படைக்கள வருணனை.

“களிறு களம் படுத்த பெருஞ்செய் ஆடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து,
வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கி,
தெற்(கு) ஏர்பு இறைஞ்சிய தலைய, நற்பல
பாண்டில் விளக்கில் பரூஉச்சுடர் அழல,
வேம்புதலையாத்த நோன்காழ் எஃகமொடு
முன்னோன் முறை முறை காட்டப், பின்னர்
மணி புறத்திட்ட மாத்தாள் பிடியொடு
பருமம் களையாப் பாய்பரிக் கலிமா
இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்ப,
புடை வீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள் தோள் கோத்தவன்கண்காளை
சுவல் மிசை அமைத்தகையன், முகன் அமர்ந்து,
நூல்கால் யாத்த மாலை வெண் குடை
தவ்வென் தசை இத்தாதுளி மறைப்ப,
நள்ளென் யாமத்துப் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்.” —நெடு நல்வாடை

அன்று நடந்த சண்டையில் போர்க் களத்திலே காயமுண்ட தனது படை வீரர்களை, பாண்டிய ராஜன், நள்ளிரவிலே அவரவர் தங்கும் படை வீடுகளில் சென்று கண்டு, அவ

ரவர்க் கேற்றவாறு வார்த்தையாடி உற்சாகப் படுத்துவதை, இப்பாக்களில் நக்கீரர் வருணித்திருக்கிறார். கவிநடை இக்காலத்தவர்க்குக் கடினமாய்த் தோன்றினும், பொருள் விளங்கிய பின் கருத்துக்களின் கம்பீரமும் அழகும் தாமே மனத்தைக் கவருமென்பதில் ஐயமில்லை. இப்பாக்களின் பொருள் வருமாறு:—பாசறையைப் போர்க்களத்திலே கொல்லும் பெருஞ்செயலைச் செய்துள்ள வீரர்கள் பிரகாசம் பொருந்திய வாள்களினால் சண்டையில் அடைந்துள்ள சிறிய புண்களைக் காணும் பொருட்டுத், தன் படை வீட்டை விட்டு வெளிப் போந்து, நன்றாகிய பல கால் விளக்குக்களில் எரியும் பருத்த தீக் கொழுந்துகள், குளிர்ந்த வாடைக்காற்று அடிக்குந்தோறும், தென்புறமாய்த் தலைசாய்ந்து எரியாநிற்க; வேப்பமாலையைத் தலையிலே சூடின வலியகாம்பினையுடைய வேலைத் தாங்கி முன் செல்லும் சேனாபதி, புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்டாநிற்க, மணிகள் கட்டிய பெரியகால்களையுடைய, கடிவாளம் சேணம் முதலியன கழற்றப்படாது நிற்கும், பாய்ந்து செல்லும் வேகத்தையுடைய செருக்கின குதிரைகள், கரிய சேற்றையுடைய தெருவிலே, தம்மேலே வீசும் துளிகளை மெய்சிலிர்த்து உதறா நிற்ப; இடத் தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகிய மேல்துகிலை இடப்பக்கத்தே அணைத்துக் கொண்டு, வாளைத் தோளிலே கோத்த தறுகண்மையையுடைய தன்வாள் எடுப்பான் தோள்மீது தன் வலக்கையை வைத்தவனாகி; புண்பட்ட வீரருக்கு அகமலர்ச்சி தோன்ற முகம் பொருந்தி; நூலாலே சட்டத்தைக் கட்டின முத்தமாலையினை யுடைய கொற்றக் குடை, தவ்வென்னும் ஓசைபட்டு அசைந்து, பரக்கின்ற துளியைக் காத்துநிற்க; நள்ளென்னும் ஓசையையுடைய நடுவியாமத்திலே பள்ளி கொள்ளானாகிச் சில வீரரோடு புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதரும்

பாண்டிய ராஜன், என்பது. இப்பாக்களிலே உள்ளதை உள்ளவாறு அழகாய்க் கூறும் கவித்திறமை நன்றாய் விளங்குகின்றது. 'வாடைக்காற்று வீசுவதால், விளக்குக் கொழுந்துகள் தெற்கு நோக்கித்தலை சாய்ந் தெரிவதும்; யுத்தசந்ததமாகவே நிற்கும் குதிரைகள் மெய்சிலிர்த்து உதறுவதால், தூள்கள் மேல் விழுவதும்; உத்தரீயம் நழுவி விழுவதை அணைத்துச் செல்வதும்; அரசன், தனது வாளைத்தாங்குவோன் தோள்மீது சாய்ந்து நடப்பதும், எத்துணை இயற்கையோ டொக்க அழகாய்க் கூறப்பட்டிருக்கின்றன என்பதை நோக்குக.

ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தான் அடங்காப்
பேதையில் பேதையார் இல்.'' —திருக்குறள்.

''மனம் மொழி மெய்கள் அடங்குவதற்குக் காரணமான தர்ம நூல்களைத் தானே கற்றிருந்தும், அவ்வடக்கத்தால் விளையும் நற்பயனை அறிந்திருந்தும், பிறர்க்கு அதனை விளங்க எடுத்துரைத்தும், தன் மட்டில் அடங்கி நன்னெறியில் ஒழுகாத மூடனிலும் பெரு மூடன் இவ்வுலகத்திலில்லை என்பது இதன் பொருள் அறியாமையும் தீயொழுக்கமும் ஒழிந்து நல்லொழுக்கம் ஏற்படுதற்குக் கல்வி கேள்விகளே ஏற்ற சாதனங்கள்; இச்சாதனங்களை யுடையவன் ஒருவன், அவற்றால் பயன் பெறுவிடின், அவனுக்கு மற்றொரு துணையில்லையாதலின், அவனை இவ்வாறு இழித்துக் கூறினர்.

53. புகழின் பெருமை.

''வென்றிலேன் என்ற போதும், வேதம் உள்ளளவும் யானும்
நின்றேன் அன்றோ, மற்(று) அவ் இராமன் பேர்நிற்குமாயின்?

பொன்றுதல்ஒரு காலத்தும் தவிருமோ? போதுமைத்தன்றோ?
இன்றுளார் நாளை மாள்வார்; புகழுக்கும் இறுதியுண்டோ?"

கம்பராமாயணம்.

இராவணன் வாய்க்கூற்ருகக் கம்பர் கூறியுள்ள இக்கருத்துக்கள் சால அழகின.

54. பாடும் வகை.

" கருங்கொடிப் புருவம் ஏரு, கயல் நெடும் கண்ணும் ஆடா,
அருங்கடி மிடறு[1]ம்விம்மா(து),அணிமணி எயிறும்[2]தோன்ரு,
இருங்கடல் பவளச் செவ்வாய் திறந்(து)இவள் பாடினளோ,
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ[3]? என்று நைந்தார்"—

சீவகசிந்தாமணி.

இச்செய்யுளில், காந்தருவதத்தை என்பாள், தனது சுயம்வரகாலத்தில் வீணைவாசித்துக்கொண்டு பாடின அழகை, திருத்தக்கதேவர் வருணித்திருக்கிருர். ஒரு பாடகன் பாடினதைப் பார்த்து, முதனுள் வலிப்பினுல் ஆடுபறிகொடுத்த இடையன் பரிதாபமுற்ற நர்டோடிக்கதையை, யாவரும் அறிவர். அவ்வாறின்றி, பாடுவாருக்குரிய லக்ஷணங்களை இது கூறுகின்றது. இவள் தான் வாய்திறந்து பாடினளோ, அல்லது, வீணைதான்பாடிற்ருே என்ற சந்தேகம் உண்டாகும்படி பாடினுள் என்று வருணித்திருப்பது எவ்வளவு அழகாயிருக்கிறது.

அ. மா.

---

1. கழுத்து 2. பல்வரிசை 3. பேசியதோ.